முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**முக்காலமும் உணர்ந்த முனிவனும் பொருளாதார மேதையுமான முருகப்பெருமான் அருளியது**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி மாசி மாதம் 19ம் திகதி முதல் மாசி மாதம் 26ம் திகதி வரை**

**மார்ச் 3ம் திகதி முதல் மார்ச் 10ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **ஞானபலம் கொண்ட பாரதமே**
**ஞானிகளை கொண்ட தமிழகமே**
**வானவர்கள் வியக்க இயற்கைபலம்**
**வலுவாய் கொண்ட பாரதம் தமிழகத்தில்**

**2.** **தமிழகத்தில் விளம்பி சால் திங்களில்**
**தக்க மூவாறோர் திகதி மேல் இருபான் ஆறு திகதிவரை**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 19ம் நாள் 03.03.2019, ஞாயிறு முதல் மாசி மாதம் 26ம் நாள் 10.03.2019, ஞாயிறு முடிய)**
**நேமமுடன் வார நிகழ்வாக எதிர்கால பலனை**
**ஞானபண்டிதனும் வார ஆசியாக உரைப்பேன்**

**3.** **உரைக்கவே மத்தியின் செயல்கள்**
**உண்மைபட மக்களை காக்கும்**
**கறைபடா வண்ணம் இருக்கவே**
**கரையேறும் தொடர்ந்து ஆளுமை**

**4.** **ஆளுமை அதிகாரம் பெருகி**
**ஆறுமுகன் என் தயவுபடவே**
**வலுவான அரசாக மாறும்**
**வல்லமையென மக்களை நசுக்கும்**

**5.** **நசுக்கும் வரிச்சுமை கொடுமை**
**நடந்தால் தொடர்ந்தால் பரதத்தில்**
**பசப்பான வாக்குறுதிகள் எல்லாம்**
**பலன்தரா ஏமாற்றம் காண நேரும்**

**6.** **நேருமைபட தமிழக எல்லையில்**
**நிருவாகம் சிறப்பு தந்தால்தான்**
**தேருதலில் வெற்றி ஆளுபவர்க்கு**
**தொடர நேரும் மக்கள் ஆதரவுபட**

**7.** **மக்கள் ஆதரவை எண்ணாது**
**மனம் போல ஊழல் வழி சென்றால்**
**தேக்கம் தமிழகம் பாரதத்தில்**
**தேர்தல் வழி ஆளுபவர்க்கு கிட்டுமப்பா**

8. அப்பனே ஞானபூமி பாரதத்தை
அன்னையென பாதுகாத்து வருகின்ற
ஒப்பில்லா இராணுவ வீரர்களுக்கு
உயர்வான யுக்திகளும் உரிமைகளும்

9. உரிமைகளும் சுதந்திரமாக வழங்கி
உயிர் பாதுகாப்பு தர வேண்டும்
பேரிடர் போல வரும் தீவிரவாதங்களை
பேச்சுவார்த்தை ஏதுமின்றி ஒடுக்க வேண்டும்

10. வேண்டுமென ஆளுமை சக்திகட்கு
வேலவன் யான் கட்டளையிட்டுள்ளேன்
தொண்டென உண்மைபட நடந்தால்
தொடர்ந்தாலே தேசங்கள் பாதுகாப்புபெறும்

11. காப்பு தரும் என் சக்தியாக
கருணா மூர்த்தியாக வந்தநல் அரங்க ஞானியை
ஒப்பு கொண்டு ஆளுபவர்கள் வருகவே
உண்மை நிலைகள் உருவாகியே

12. உருவாகியே மேலும் கீழுமென
உண்மையானவர்கள் சபையாக மாறி
பரதமும் தமிழகமும் வளரும் உயரும்
பண்பானவர்களால் ஆளுமை பெறும் வார ஆசி நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் மாசி மாதம் 19ம் நாள் 03.03.2019, ஞாயிறு முதல் மாசி மாதம் 26ம் நாள் 10.03.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

ஞானபலம்மிக்க கொண்ட பாரததேசமே ஞானிகளை கொண்டிட்ட தமிழகமே வானவர்களான தேவர்களும் வியக்குமளவிற்கு இயற்கை பலம்தனை வலுவாய் கொண்ட பாரதத்திலும் தமிழக தேசத்திலும் விளம்பி வருடம் மாசி மாதம் 19ம் நாள் 03.03.2019, ஞாயிறு முதல் மாசி மாதம் 26ம் நாள் 10.03.2019 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

மத்திய அரசின் செயல்பாடுகள் ஆட்சி புரிபவர்கள் உண்மையுடன் மக்களை காக்கும் நோக்கத்துடன் கறைபடா வண்ணமாக செயல்பட்டால் தற்போதைய ஆட்சியே தொடர்ந்து நடந்து ஆட்சி புரிபவர்க்கு அதிகாரம் பெருகி முருகப்பெருமான் எனது தயவுடன் வலுமிக்க அரசாக மாறிடும். அதை விடுத்து ஆட்சி புரிவோர் தமது வல்லமைகளை காண்பிக்க எண்ணி மக்களை நசுக்கும்விதமாக மக்கள் மீது வரிச்சுமை கொடுமையை திணித்தால் வரிச்சுமை கொடுமை தொடர்ந்து நடந்திட்டால் பாரத தேசத்தில் அவர்கள் தருகின்ற கவர்ச்சியான வாக்குறுதிகள் எல்லாவற்றையும் மக்கள் ஏற்காமல் புறக்கணிப்பர். ஆதலால் ஆட்சி புரிவோர் ஏமாற்றத்தினை அடைந்திட நேர்ந்திடும்.

தமிழகத்தை ஆட்சி செய்வோர் தமது நிர்வாகத்தினை சிறப்புடன் நடத்தி ஆட்சி புரிந்தால்தான் வருகின்ற தேர்தலிலே ஆட்சி பொறுப்பில் உள்ளோருக்கு வெற்றி கிடைத்திடும். மக்களின் ஆதரவினை மனதில் கொள்ளாமல் மனம் போனபோக்கில் ஊழல் செய்து தீமையான வழியில் சென்றால் தமிழகத்திலும் சரி, பாரத தேசத்திலும் சரி, தேர்தலில் வெற்றி பெறுவது தடைபடும்.

அப்பனே இந்த தாய் பூமி ஞானபூமி பாரததேசத்தினை தாயாக எண்ணி பாதுகாத்து வருகின்ற ஒப்பில்லாத ராணுவ வீரர்களுக்கு உயர்வுமிக்க யுக்திகளும், உரிமைகளும் ஆட்சி பொறுப்பில் உள்ளவர்கள் பெருந்தன்மையோடு வழங்கி அவர்களது உயிருக்கு பாதுகாப்பினை தந்திட வேண்டும். திடீரென வருகின்ற இயற்கை பேரிடரைப் போல வருகின்ற தீவிரவாத செயல்களை பேச்சு வார்த்தைகள் இன்றி உடனடியாக ஒடுக்க வேண்டும். ஆட்சி செய்வோரும் அதிகாரத்தில் உள்ளோர்க்கும் முருகப்பெருமான் எமது கட்டளை போல இதை ஏற்று செயல்பட வேண்டும்.

ஆட்சி பொறுப்பில் உள்ளோர் அதிகாரத்தில் உள்ளோர் நாட்டை ஆட்சி புரிவதை தொண்டு செய்வது போல எண்ணி உண்மையுடன் நடந்தால்தான் நாடு பாதுகாப்பை பெறும்.

அருள் பாதுகாப்பு தருகின்ற முருகப்பெருமான் எமது சக்தி வடிவமாக தர்மமே தலைமையாய் கொண்ட கருணாமூர்த்தியாக இவ்வுலகின் தோன்றியுள்ள நல்ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியை ஆட்சி புரிவோர் ஒப்புக்கொண்டு அரங்கமகானை நாடி வந்து தன்னிலை உணர்ந்திட உண்மையான நிலைகள் நாட்டில் உருவாகி மத்திய அரசிலும் மாநில அரசிலும் ஆட்சி சபை, உண்மையானவர்கள் சபையாக மாறி பாரததேசமும் தமிழகமும் விரைந்து வளர்ந்து உலக அரங்கில் உயர்வான நிலையை அடைந்திடும் இந்த நாடு பண்பானவர்களால் ஆளப்படும் என தமது வார ஆசி நூல் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

—சுபம்—